# இஸ்ரவேலர்களின் வரலாறு பாடம் - 4

இந்தப் பாடத்திலிருந்து ஒரு சில முக்கியமான காரியங்களை நாம் சிந்திக்க இருக்கின்றோம். வரலாற்றை நாம் படிக்க வேண்டியது மிகமிக முக்கியமான காரியம் என்று நமக்கு தெரிந்த ஒரு விஷயமாக தான் இருக்கின்றது. அதிலும் குறிப்பாக இஸ்ரவேல் வரலாற்றை நாம் சிந்திக்க வேண்டியது மிக மிக அவசியம் என்று நாம் ஒரு சில நிகழ்ச்சிகளிலே சிந்தித்தோம். ஏனெனில் இஸ்ரவேல் வரலாறு நம்முடைய உலக வரலாற்றின் எதிர்காலமாய் இருக்கிறது. அது உலக வரலாற்றையே நிர்ணயிக்க கூடியதாக இருக்கிறது. ஏனெனில், உலக வரலாற்றை நிர்ணயிக்கின்ற கர்த்தர் இஸ்ரவேல் தேசத்தின் வரலாற்றை கொண்டே, உலக வரலாற்றை நிர்ணயிக்கின்றார் என்று நாம் பார்க்க இருக்கின்றோம்.

இஸ்ரவேல் தேசத்தின் வரலாறு மிக முக்கியமான, எதிர்காலத்தை குறித்த காரியமாய் இருக்கிற படியினால் இன்றைய காலகட்டத்தை புரிந்து கொள்வதற்கு நமக்கு இஸ்ரவேல் வரலாற்றை படிக்க வேண்டியது அவசியமாய் இருக்கிறது என்று நாம் சிந்திக்கின்றோம். நிகழ்காலத்தை புரிந்து கொண்டால்தான் நாம் மிக தெளிவாக எதிர்காலத்தை குறித்து திட்டமிட முடியும். நம்முடைய நிகழ்காலத்தை புரிந்து கொள்ள வேண்டுமானால் பழைய காலத்தை தெரிந்துகொள்ள வேண்டியது அவசியம். நாம் எங்கிருந்து வந்தோம்? எப்படியாக தேவனுடைய அந்தத் திட்டத்தின்படியான இந்த இடத்திற்கு வந்தோம்? என்று சொல்லுகின்ற காரியங்களை எல்லாம் பழங்கால வரலாறாக இருக்கிறது.

பழங்கால வரலாற்றிலேயே நம்முடைய துவக்கத்தை நாம் பார்க்கின்றவர்களாக இருக்கின்றோம். ஆக நம்முடைய இன்றைய நிலையை புரிந்து கொள்வதற்கு நம்முடைய பழங்கால வரலாறு மிகவும் அவசியம் என்பது மிக தெளிவான விஷயம்தான்.

இஸ்ரவேல் தேசத்தின் வரலாறும் உலக வரலாற்றின் அங்கமாய் இருக்கிறபடியால் நாம் இஸ்ரவேல் தேசத்தைப் பற்றிய பழங்கால வரலாற்றை தெரிந்து வைத்திருக்க வேண்டியது அவசியமாயிருக்கின்றது. நாம் பொதுவாக தோல்விகளில் இருந்தும், வெற்றியில் இருந்தும் பாடங்களை கற்றுக் கொள்கிறவர்களாய் இருக்கிறோம். குறிப்பாக இஸ்ரவேல் தேசத்தின் காரியங்களை வேதாகமத்தின் அடிப்படையிலான படிப்பில் இருந்து நாம் அநேக காரியங்களை

கற்றுக்கொள்ள இருக்கின்றோம். நாம் இன்றைய நிகழ்கால வரலாற்றை இல்லாவிட்டால் இன்றைய நிகழ்காலத்தை நம்மால் மாற்றி அமைக்க முடியுமானால், நம்முடைய எதிர்கால காரியங்களையும் நாம் மாற்றி அமைக்க முடியும். ஆகவே நம்முடைய பழங்கால, குறிப்பாக இஸ்ரவேல் தேசத்தில் உள்ள பழங்கால தோல்வியான நிலைகளில் இருந்தும், வெற்றியான நிலைகளில் இருந்தும் நாம் அநேக காரியங்களை, உலகின் காரியங்களை, நம்முடைய வாழ்வின் காரியங்களையும் கூட அதிலிருந்து நாம் புரிந்துகொள்ள போகிறோம். அதை நாம் புரிந்து கொள்ளும்போது தான் நம்முடைய இன்றைய வரலாறு புரியும். வருகின்ற நாட்களில் எதிர்கால வரலாற்றையும் நாம் நிர்ணயிக்க முடியும் என்பதிலே சந்தேகம் இல்லை. வரலாற்றில்தான் தேவன் கிரியை செய்து கொண்டிருப்பதை காணமுடிகிறது. அங்கேதான் தேவனுடைய கரம் எவ்விதமாய் செயல்பட்டது என்பதையும் நாம் அறிந்துகொள்ள முடிகிறது. அங்கே இஸ்ரவேல் ஜனங்கள் மத்தியிலே அவர்களை தேவன் எவ்விதமாக அழைத்து, எவ்விதமாய் ஆசீர்வதித்து, எவ்விதமாய் அவர்கள் தேவனை விட்டு விலகியபோது அவர்களை எவ்வாறு நடத்தினார் என்றும், **அதினால்** தேவன் அவர்களுக்கு கொடுத்த ஒருவேளை தண்டனை, அதுபோல எதிர்காலத்துக்கு கொடுத்த வாக்குத்தத்தங்கள் போன்றவற்றை எல்லாம் புரிந்து கொள்ளும்போது தேவனுடைய கரம் எவ்விதமாய் இஸ்ரவேல் ராஜ்ஜியத்தில் செயல்பட்டது என்பதை புரிந்து கொள்கிறோம். அதோடு உலக வரலாற்றை, அந்த நிகழ்வுகள், அந்த வாக்குத்தத்தங்கள் எவ்விதமாய் அது இனிவரும் காலத்தில் நிர்ணயிக்க போகிறது என்பதையும் நாம் புரிந்து கொள்கிறோம். ஆக வரலாற்றின் எல்லாப்பகுதிகளிலும் தேவனுடைய கரம் செயல்பட்டதாய் இருக்கிறது.

இஸ்ரவேல் தேசத்தில் குறிப்பாக, வரலாற்றின் தேவன் நம்முடைய தேவன் என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். தேவன் ஈடுபடாமல் எதுவுமே உலக வரலாற்றில் நடந்து இருக்கவில்லை. அதேபோல் தேவன் செயல்பட்டுக்கொண்டு இருக்கிறார் என்பதையும், ஆபிரகாம் காலத்தில் இருந்து வித்தியாசமான விதத்தில் செயல்பட ஆரம்பித்தார் என்பதையும் வரலாறு நமக்கு மிகவும் தெளிவுபட கூறுகிறது என்று நாம் அறிந்துகொள்ள வேண்டும். ஆபிரகாம் வாழ்வில் இருந்து தேவன் புதிய விதமாய் செயல்பட்டார் என்பதை நாம் வரலாற்றிலே பார்க்கின்றோம்.

ஆபிரகாமுக்கு தேவன் தம்மை வெளிப்படுத்தினார் அவருடைய சந்ததிக்கு மிகவும் பரிபூரணமான வழியிலே தேவன் தம்மை வெளிப்படுத்தி, தம்முடைய காரியங்களை அவர்களுக்கு வெளிப்படுத்தி காண்பிப்பதின் மூலம் அவர்களை கொண்டு மற்றவர்களுக்கு தமது மகத்துவத்தை காண்பிப்பதும் தெய்வதிட்டமாய் இருந்தது. ஆதியாகமம் 12:3 அவ்விதமாக தான் வாசிக்கிறோம். உன்னை ஆசீர்வதிக்கிறவர்களை ஆசீர்வதிப்பேன், உன்னை சபிக்கிறவனை, சபிப்பேன். பூமியில் உள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும் என்றார் என்பதை நாம் வாசிக்கின்றோம். ஆக ஆபிரகாமுக்கும் மற்ற பூமியில் உள்ள வம்சங்களுக்கும் தொடர்பு இருக்கிறது என்று நாம் பார்க்கிறோம். ஆபிரகாமை ஆசீர்வதிக்கிறவர்களை ஆசீர்வதித்தார், அவனுக்கு எதிர்த்து நின்றவர்களை தேவன் இல்லாமல் போகப்பண்ணினார். அது மட்டுமல்ல, பூமியில் உள்ள வம்சங்கள் எல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும் என்று தேவன் வாக்குபண்ணினதை இஸ்ரவேல் வரலாற்றில் நாம் காணமுடிகிறது. அவன் மூலமாக பூமியில் உள்ள வம்சங்களெல்லாம் எல்லாம் ஆசீர்வதிக்கப்பட்டதாய் இருக்கிறது என்று தேவன் ஆபிரகாமுக்கு சொன்னார், அதே காரியத்தை இன்றுவரை தேவன் செய்துகொண்டே இருக்கிறார் என்பதை வரலாறு மிக தெளிவாக நமக்கு அதை உறுதிப்படுத்திக் காண்பித்துக் கொண்டு இருக்கிறது.

ஆபிரகாம் மூலமாக தான் நீங்களும், நானும் இன்று விசுவாசத்தினாலே, இஸ்ரவேல் தேசத்துக்கு தேவன் கொடுத்த அதே ஆசீர்வாதம், வாக்குத்தத்தம், காணியாட்சி அதனுடைய ஆசீர்வாதங்கள் நமக்கும் கிடைக்கத்தக்கதாய் தேவன் மாற்றியமைத்த வரலாற்றையும் நாம் படிக்க இருக்கின்றோம். ஆக பூமியில் உள்ள வம்சங்களெல்லாம் ஆபிரகாம் மூலமாக ஆசீர்வதிக்கப்பட்டது. ஆபிரகாமுக்கு அவனுடைய சந்ததிக்கு தேவன் தம்மை வெளிப்படுத்தினார் பரிபூரணமாக. அதினாலே அவர்கள் தேவனைப்பற்றி புறஜாதியாருக்கு, அதாவது உங்களுக்கும் எனக்கும் கூட அவருடைய சந்ததியாக தங்களை விளங்கபண்ணினபடியால் நாம் ஆபிரகாமிற்குள் முழுவதுமாய் ஆசீர்வதிக்கப்பட்ட இடத்திற்கு வந்து இருக்கின்றோம்.

பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் ஆபிரகாமிற்குள் ஆசீர்வதிக்கப்பட்ட இடத்திற்கு வந்து இருக்கிறது. இஸ்ரவேல் வரலாற்றை படிப்பது மிகவும் அவசியம்தானா? என்று நாம் கடந்த நிகழ்சிகளிலே சற்று சிந்தித்தோம். அது

எந்தளவுக்கு முக்கியமானது என்று நாம் சிந்தித்தோமானால் நமக்கு பிரயோஜனமாக இருக்கும். ஆகவே ஒருசில காரியங்களை நினைவுபடுத்த விரும்புகிறேன். இஸ்ரவேல் வரலாற்றை படிப்பது மிகவும் அவசியம், ஏனெனில் பழைய ஏற்பாட்டில்தான் இஸ்ரவேலரின் வரலாறு காணப்படுகிறது. அது தேவனுடைய வார்த்தையாய் இருக்கிறது. இது முதலாவது காரியம். நாம் இஸரவேல் வரலாறு படிப்பது அவசியம். ஏனென்றால் அது தேவனுடைய வார்த்தை, இரண்டாவது நமது வேதாகமத்தின் மிகப்பெரிய பகுதியாக இருப்பது பழைய ஏற்பாடுதான். இஸ்ரவேல் வரலாற்றில் உள்ளடக்கிய அந்த பகுதிதான்,

மூன்றாவது காரியம் இஸ்ரவேல் வரலாற்றில் தான் தேவன் தம்மை வெளிப்படுத்தி காண்பித்திருக்கிறார். ஆகவே அந்த வரலாற்றை படிக்க வேண்டிது மிகவும் அவசியம். வெகுகாலமாய் தேவன் தம்மை வெளிப்படுத்திக் காண்பித்து இருக்கிறார். இஸ்ரவேல் வரலாற்றில்தான் மீட்பின் திட்டத்தையும் கொடுத்து இருக்கிறார். ஆகவே இஸ்ரவேலின் வரலாற்றை படிப்பது அவசியம் என்று சற்று நினைவில் கொள்வோம். நான்காவது காரியம், இஸ்ரவேல் தேசத்தின் வரலாற்றில் குறிப்பாக கோத்திர பிதாக்களுடைய பலதரப்பட்ட விசுவாசத்தை பார்க்கிறோம். அவர்களுடைய அனுபவங்கள், அவர்களுடைய வாழ்க்கை தரம் போன்றவற்றை நாம் படிக்கும்போது நம்முடைய விசுவாச வாழ்வின் கட்டுமானத்திற்கு அது உறுதியானதாக இருக்க போகிறது. அதே காரியத்தை பழைய ஏற்பாட்டில் தேவன் இந்த மக்களை நடத்திய விதம் வாழ்வின் அனுபவங்கள், புதிய ஏற்பாட்டில் மீண்டுமாக வலியுறுத்தி சொல்லப்பட்டிருப்பதால் இஸ்ரவேல் வரலாற்றை நீங்களும், நானும் படிப்பது மிகவும் அவசியமானதாய் மாறிபோய் விட்டது என்பதை நாம் சற்று நினைவில் கொள்ள வேண்டும். ஐந்தாவது காரியம் இந்த பழைய ஏற்பாட்டில்தான் மனிதனின் தொடக்கத்தை பார்க்கிறோம். தேவன் இவ்விதமாக தம்முடைய சாயலாக மனிதனை படைத்தார் என்று பார்க்கிறோம். தேவன் தனிப்பட்ட முறையில் மனிதனோடு பழகுகிறவராக இருக்கிறார். அதனால் மனிதன் தேவனுக்கு கணக்கு ஒப்புவிக்கிறவனாக இருக்கிறான் என்று நாம் இதிலே பார்க்கிறோம்.

ஆறாவது காரியம் இந்த இஸ்ரவேல் தேசத்தின் வரலாற்றில்தான் ஆதாம் ஏவாளின் வீழ்ச்சியைக் குறித்து, பாவத்தின் அந்த தன்மைகளை குறித்து எவ்விதமாய் ஆரம்பித்தது என்பதை எல்லாம் நாம் அங்கே பார்க்கிறோம். ஆகவே

தேவன் பாவத்தில் இருந்து மீட்பின் காரியத்தை செய்வதற்காக எவ்விதமான வாக்குத்தத்தம் கொடுத்தார், அதை எவ்விதமாய் நிறைவேற்றுவதற்கு செயல்பட்டார், அதை அழிப்பதற்கு பிசாசு எவ்விதமாக வரலாற்றிலே ஈடுபட்டு செயல்பட்டான் என்பதை எல்லாம் இந்த பழைய ஏற்பாட்டிலே இஸ்ரவேலின் வரலாற்றிலே தான் நாம் பார்க்கின்றோம். மட்டுமல்ல ஏழாவதாக நம் வாழ்வின் காரியங்கள், மரணத்திற்கு பின்பதாக உள்ள காரியங்கள் தேவனை தொழுது கொள்ள வேண்டிய அந்த உண்மையான ஆராதனை அது பற்றிய கட்டளை போன்றவற்றை எல்லாமே இந்த இஸ்ரவேல் தேசத்தின் வரலாற்றிலேயே கொடுக்கப்பட்டிருக்கிறபடியினால் இஸ்ரவேல் தேசத்தின் வரலாற்றை பற்றி படிப்பது அவசியமாகிறது. இந்த காரியத்தை முன்னே கற்றுக்கொண்ட பாடத்தோடு சேர்த்துக் கொள்ள வேண்டியது மிகவும் அவசியம். இப்படி அநேக காரியங்கள் இஸ்ரவேல் தேசத்தின் வரலாற்றை படிக்க வேண்டும் என்று வலியுறுத்துகின்றன. அதை நான் அவ்வப்போது கூறுவேன். இருந்தபோதும் நாம் இப்பொழுது கோத்திரபிதாக்களின் காலத்தில் நிகழ்ந்த முக்கிய நிகழ்வுகளையும், முக்கியமான காரியங்களையும், இஸ்ரவேல் தேசத்தின் வரலாற்றிலே அவை மிகவும் அடிப்படையாக இருப்பதால் நாம் சிந்திக்க இருக்கின்றோம். அந்த கோத்திரபிதாக்களை எவ்விதமாக அழைத்தார். அவர்களுடைய வாழ்க்கை வரலாறு எவ்விதமாக இருந்தது. அவர்களுடைய வாழ்வின் பழக்க வழக்கங்கள் அவர்களுடைய சமுதாயத்தின் அமைப்பு எவ்விதமாக இருந்தது என்றெல்லாம் நாம் பார்க்கும்போது நாம் இஸ்ரவேல் தேசத்தை தெளிவாக புரிந்து கொள்வதற்கு அது உதவியாக இருக்கும்.

முதலாவது, நாம் ஆபிரகாமை அழைத்த விதத்தைக்குறித்து சற்று விளக்கமாக சிந்திக்க இருக்கின்றோம். ஆதியாகமம் 1-11 அதிகாரம் வரை தேவன் மனிதனை குறித்து வைத்திருக்கிற திட்டத்தை பற்றி அதிகமாய் சொல்லப்படுகிறது. ஆபிரகாமின் அழைப்பின் மொத்த நோக்கத்தை நாம் இப்பொழுது சற்று அறியும்போது நமது வாழ்க்கைக்கு மிகவும் பிரயோஜனமாக இருக்கும். ஆதியாகமம் 1 முதல் 11 அதிகாரம் வரை தேவன் மனிதரை மீட்பதற்காக வைத்த சரியான திட்டத்தைப் பற்றி சொல்லப்பட்டிருக்கிறது. அது எவ்விதமாக பாவம் வந்து சீரழித்தது, தேவனுடைய திட்டத்தை அந்த பாவமானது எவ்வாறு இடையூறாக நின்று தடுத்தது என்று நாம் இந்த அதிகாரங்களிலே

பார்க்கிறோம். 11ம் அதிகாரம் கடைசி பகுதியிலே எவ்விதமாக முழுமனுகுலம், பாவத்தில் இடிபாடு கொண்டுள்ளது என்று பார்க்கின்றோம். ஆதியாகமம் 1-11 அதிகாரம் வரை அவ்விதமாய் பாவம் நுழைந்துள்ள து. அந்த பாவம் எவ்விதமாய் தேவனுடைய திட்டத்தை அவருடைய அசலான (உண்மையான) திட்டத்தை எந்த அளவுக்கு இடையூராக நின்று தடுத்தது என்று நாம் பார்க்கின்றோம். மட்டுமல்ல 11ம் அதிகாரம் நிறைவு பகுதிக்கு வரும்போது முழு மனுகுலமும் பாவத்தில் வீழ்ந்து கிடந்தது என்று பார்க்கிறோம். 12ம் அதிகாரம் வரும்பொழுது இந்த பாவத்தைக் குறித்த பிரச்சனைக்கு எவ்விதமாக தீர்வு உண்டாக போகிறது என்று 12ம் அதிகாரத்தின் துவத்திலிருந்து இருந்து நாம் பாாக்க முடிகிறது.

மனிதருடைய வீழ்ச்சி, தம்மை சிருஷ்டித்தவருடைய உறவில் இருந்த பிளவு, இதற்கு ஒரு தீர்வு உண்டாக்குகிறது தான் 12ம் அதிகாரத்தின் துவக்கம். நாம் ஆதியாகமம் 11ம் அதிகாரத்தைப் பார்க்கும்போது அங்கே பாபேல் கோபுரத்தின் காரியத்தை படிக்கின்றோம். பாபேல் கோபுரத்தை கட்டுகின்ற நிகழ்விலே பாவத்தினுடைய பரவுதல் எவ்விதமாய் பரவி இருந்தது என்று பார்க்க முடிந்தது மட்டுமல்ல ஜனங்கள் தேவனுக்கு முன்பாக கலகம் பண்ணினதையும் அந்த அதிகாரத்தில் பார்க்கின்றோம். மட்டுமல்ல எவ்வளவு தூரம் மக்கள் தேவனை விட்டு பிரிந்து இருந்தார்கள், அதினால் தேவனுக்கும், மனிதனுக்குமிடையே நடைபெற்ற நிகழ்வு, அதனால் ஏற்பட்ட சாபம் போன்றவற்றை நாம் இந்த அதிகாரத்தில் பார்க்கின்றோம். ஆனால் ஆபிரகாம் மூலமாக 12ம் அதிகாரம் துவக்கத்தை பார்க்கும்போது மீண்டும் தம்முடைய ஜனங்கள், தம்முடன் இணைகிறது பற்றி கர்த்தர் சிந்திக்கின்றதை பார்க்கின்றோம். 11ம் அதிகாரத்திலே பாவத்தின் விளைவையும், பிரிவினையும் மனுகுலம் இன்னும் தேவனைவிட்டு பிரிக்கப்படுகிறதையும் பார்க்கின்றோம். 12ம் அதிகாரம் துவக்கத்தில் ஆபிரகாம் மூலமாக தம்முடைய ஜனத்தை தம்மோடு சேர்த்து கொள்ளுகிறதை குறித்து தேவன் திட்டமிடுகிறதை பார்க்கிறோம்.

ஆபிரகாம் மூலமாக மீட்கப்படபோகின்ற இந்த சந்ததியார்மீது, தேவனுடைய ஆசீர்வாதம் என்றென்றும் நிலைக்கிறதாய் இருக்கிறது. அப்பொழுது ஆபிரகாம் மூலம் மீட்கப்பட்ட சந்ததி உண்டாக்குவதற்காக ஒரு யூத இனத்தை உண்டாக்குவதற்காக அதை தொடர்ந்து விசுவாசத்தினால் யூதனாக இருக்கிற உங்களையும், என்னையும் இணைக்கிற ஒரு சந்ததியை உருவாக்குகின்ற,

மீட்கப்பட போகின்ற ஒரு சந்ததி உருவாக்குகிற ஒரு அதிகாரத்தை தான் இந்த 12ம் அதிகாரத்திலே பார்க்கின்றோம். அவர்கள் தேவனுடைய சொந்த ஜனம் என்று அழைக்கப்படபோகிறார்கள். நீங்களும், நானும் அப்படிதான் அழைக்கப்படுகிறோம். அவருடைய சொந்த ஜனம். மனிதனுடைய பாவம், அதினால் தேவனுக்கும், மனிதனுக்கும் இடையே ஏற்பட்ட பிளவு என்ற இந்த பிரச்சனைக்கு, தேவன் ஆபிரகாம் மூலமாக ஒரு தீர்வு உண்டாக்குகிறதை இந்த 12ம் அதிகாரத்திலே நாம் பார்க்கின்றோம். ஆபிரகாமில் இருந்துதான் மீட்கப்பட்ட சந்ததியின் வரலாறு ஆரம்பமாகிறது. அதாவது யூத வரலாறு, இஸ்ரவேல் தேசத்தின் வரலாறு அதற்கு வித்திட்டவர் ஆபிரகாம் என்று கடந்த பாடத்தில் படித்தோம்.

ஆபிரகாமை தேவன் எவ்விதமாக அழைத்தார் என்பதை ஆபிரகாமின் அழைப்பைக் குறித்து ஆதியாகமம் 12:1-3, 15:1-7, 15,18, 17:10-14, 22:15-18 ஆகிய வசனங்களில் தெளிவாக சொல்லப்பட்டு இருக்கிறதை நாம் பார்க்கிறோம். தேவன் ஆபிரகாமை அழைத்த காரியத்திலே கீழ்கண்ட காரியங்கள் எல்லாம் உள்ளடக்கியதாய் இருந்தது.

- உன்னுடைய தேசத்தை விட்டு வெளியேவா, உன்னுடைய தகப்பன் வீட்டை விட்டு வெளியே வா.
- கானான் தேசம் வாக்குப்பண்ணப்பட்டது.
- அவருடைய சந்ததி வாக்குபண்ணப்படுகிறது.
- பெரிய தேசமாய் ஆபிரகாமை மாற்றுவதாக வாக்குத்தத்தம்.
- ஆபிரகாம் உலகம் அனைத்திற்கும் ஆசீர்வாதமாய் இருக்கப்போகிறதைப் பற்றிய வாக்குத்தத்தம்.
- தேவன் அவனுக்கு கேடகமாய் இருப்பதைப் பற்றிய வாக்குத்தத்தம்.
- தேவன் தம்மையே அடையாளமாக வைத்து உறுதியாக வாக்குபண்ணுதல்.
- விருத்தசேதனமாகிய உடன்படிக்கை.

இத்தனை காரியங்களும் ஆபிரகாமின் அழைப்பின் காரியத்திலே இருந்தது.

இஸ்ரவேல் ஜனங்களின் விசுவாசம் எப்படியாய் இருந்தது என்றால், தேவன் தங்களை சொந்த ஜனமாக தெரிந்தெடுத்து இருக்கிறார் என்பதின்

அடிப்படையிலேயே இஸ்ரவேலரின் அந்த விசுவாசம் இருந்தது. இவ்விதமாகத்தான் அவர்கள் நம்பினார்கள், விசுவாசிக்கிறார்கள் தேவனுடைய தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனம் இஸ்ரவேல் ஜனம் என்பது இவ்விதமாக நமக்கு தெரிகிறது. அவர்களை இரண்டு விதமாக தேவன் தேர்நதெடுத்தார்.

முதலாவது எவ்விதமாக தேர்ந்தெடுத்தார்? ஆபிரகாமை அவனுடைய தேசத்தில் இருந்து வெளியே கொண்டுவந்து, அவனுடைய தேசத்திலிருந்து ஜனங்களை, அவனுடைய தகப்பன் வீட்டாரை கானான் தேசத்துக்கு கொண்டுவந்து அவர்களோடு நித்திய உடன்படிக்கை செய்துகொண்டு அவன் சந்ததியாரோடு இவ்விதமாக நித்திய உடன்படிக்கை செய்து கொண்டு, ஆபிரகாமின் சந்ததியார் அந்த வம்சங்கள் எல்லாம் அவனுக்குள் ஆசீர்வதிக்கப்பட்டதாய் இருக்கும் என்று சொல்லப்படுகிற முதலாவது தேர்ந்தெடுப்பு. இதைக்குறித்து ஆதியாகமம் 11:31 முதல் 12:7 வரையிலான வசனங்களில் பார்க்கமுடியும். 15வது, 17வது வசனத்திலும் பார்க்கின்றோம். அடுத்து ஆதியாகமம் 22:15-18 வசனங்கள், நெகேமியா 9:7, ஏசாயா 41:8 வசனங்களில் பார்க்கின்றோம். ஆக தேவன் ஆபிரகாமை அவனுடைய தேசத்தை விட்டு வெளியே கொண்டுவந்து, அவனையும் அவனுடைய சந்ததியையும் கானான் தேசத்தில் வைத்து, உலகிலுள்ள வம்சங்கள் எல்லாம் அவனுக்குள் ஆசீர்வதிக்கப்படும்படியாக அவர்களை தேர்ந்தெடுத்தார் என்று பார்க்கின்றோம்.

இரண்டாவது காரியம் தேவன் ஆபிரகாமுடைய வித்தாகிய அவனுடைய சந்ததியாரை எகிப்தின் அடிமைதனத்தில் இருந்து மீட்டு எடுத்து அவர்களை மோசேயின் தலைமையின் கீழே வெளியே கொண்டுவந்தது, மட்டுமல்லாமல் ஆபிரகாமோடு செய்து கொண்ட உடன்படிக்கையை புதுப்பித்து, அவர்களை கானான் தேசத்தில் வைத்து அதை அவர்களுடைய சொந்த தேசமாக மாற்றிக் கொடுப்பதின் மூலமாக தேவன் இந்த தேர்ந்தெடுப்பை செய்தார் என்று நாம் பார்க்க முடிகிறது.

முதலாவது ஆபிரகாமை வெளியே கொண்டுவந்தார். இப்பொழுது ஆபிரகாமின் சந்ததியை எகிப்தின் அடிமைத்தனத்தில் இருந்து வெளியே கொண்டுவந்து இந்த தேர்ந்தெடுப்பை செய்தபடியால் இஸ்ரவேல் மக்கள் தங்களுடைய வரலாற்றை திரும்பி பார்த்து, நாங்கள் தேவனால் உருவாக்கப்பட்ட

இளம் சந்ததியார் என்று நம்புகிறார்கள். ஏசாயா 43:1 – ‘‘இப்போதும் யாக்கோபே, உன்னைச் சிருஷ்டித்தவரும், இஸ்ரவேலே, உன்னை உருவாக்கினவருமாகிய கர்த்தர் சொல்லுகிறதாவது: பயப்படாதே; உன்னை மீட்டுக்கொண்டேன்; உன்னைப்பேர்சொல்லி அழைத்தேன்; நீ என்னுடையவன்.’’ என்று சொல்லுகிறதை பார்க்கிறோம். இதை குறித்து தான் நாம் சற்று முன்னர் இரண்டு காரியங்களை பார்த்தோம். எனவே இஸ்ரவேல் தேசம் தேவனால் உருவாக்கப்பட்ட தேசம் என்று மீண்டும் சொல்லப்படுவதை இந்த வசனத்தில் பார்க்கிறோம்.

இஸ்ரவேலே உன்னை உருவாக்கியவருமாகிய கர்த்தர் என்று சொல்லுகிறார். இஸ்ரவேல் தேசத்தை தேவனே உருவாக்கினார் என்று அவர்கள் நம்பினார்கள். அதுதான் சரி, அது மட்டும் அல்ல மீட்டுக்கொண்டார். தேவன் என்னை மீட்டுக்கொண்டார். ஆக இவ்விதமாக தேவன் அவர்களை சிருஷ்டித்த நாளில் இருந்து அழைத்த அந்த இஸ்ரவேல் தேசம் என்ற ஒன்றை உருவாக்கி அவர்களை மீட்டுக்கொண்ட சந்ததியாய் இந்த உலகத்திற்கு வைத்திருக்கிறார். அவர்கள் மூலமாக மீட்பை நீங்களும், நானும் பெற்று இருக்கின்றோம். ஆபிரகாம் கொண்டிருந்த இந்த விசுவாசம் மட்டும் அல்ல, தேவன் ஆபிரகாமுக்கு கொடுத்த அந்த வாக்குதத்தம் ஆதியாகமம் 22:16 மீண்டுமாக உறுதிப்படுத்தப்படுகிறது என்பதை நாம் பார்க்கின்றோம். ஆதியாகமம் 22:16,17. நீ உன் புத்திரன் என்றும் ஏகசுதன் என்றும் பாராமல் அவனை ஒப்புக்கொடுத்து இந்த காரியத்தை செய்தபடியால் நான் உன்னை ஆசீர்வதிக்கவே ஆசீர்வதித்து, உன் சந்ததியை வானத்தின் நட்சத்திரங்களைப் போலவும், கடற்கரை மணலைப் போலவும் பெருகவே பெருக பண்ணுவேன் என்றும் உன் சந்ததியார் தங்கள் சத்துருக்களின் வாசஸ்தலங்களை சுதந்தரித்து கொள்வார்கள் என்றும் அங்கே சொல்லப்படுவதை பார்க்கிறோம். எனவே தேவன் கொடுத்த அந்த வாக்குதத்தம் மீண்டும் உறுதிப்படுத்தப்படுகிறது.

பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் ஆசீர்வதிப்பதைப் பற்றி இங்கே தேவன் சொல்லுகிறார். தேவனுடைய அந்த வாக்குத்தத்தத்தின் பெயரிலே கட்டப்பட்ட ஆபிரகாமின் விசுவாசம் இங்கே உறுதி செய்யப்பட்டது. அது மட்டும் அல்ல ஆதியாகமம் 35:10வது வசனத்திலே அங்கே இஸ்ரவேல் என்று யாக்கோபுக்கு பெயரிடுவதை பார்க்கிறோம். இப்பொழுது உன் பெயர் யாக்கோபு இனிமேல் உன் பெயர் யாக்கோபு எனப்படாமல் இஸ்ரவேல் என்று உனக்கு பெயர் வழங்கும் என்று

சொல்லி அவருக்கு இஸ்ரவேல் என்று பெயரிட்டார் என்று வாசிக்கின்றோம். இதுதான் இஸ்ரவேல் தேசத்தின் பெயர் முதன்முதலில் சூட்டப்படுகிற இடம். யாக்கோபை தேவன் இஸ்ரவேல் தேசமாக அறிவிக்கின்றார். யாக்கோபினுடைய பெயரை இஸ்ரவேல் என்று மாற்றின அந்த செய்கை அந்த தேசத்தின் பெயராக மாறியது. தேவன் அவ்விதமாக யாக்கோபின் பெயரை இஸ்ரவேல் என்று மாற்றினார். ஆகவே யாக்கோபினுடைய அந்த பன்னிரெண்டு பிள்ளைகள், இஸ்ரவேல் என்று அழைக்கப்படுகிறார்கள், கோத்திரபிதாக்கள், ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு, யாக்கோபின் 12 பிள்ளைகள் இவர்கள்தான், இஸ்ரவேல் தேசத்தின் ஜனங்கள். அதைக்குறித்து ஆதியாகமம் 34,7ம் வசனம், யாத்திராகமம் 1:8ம் வசனத்திலே பார்க்கின்றோம். இஸ்ரவேல் தேசம் தன்னை தேவனுடைய விசேஷித்த ஜனமாய் தங்களை கருதினார்கள் என்று நாம் பார்க்கின்றோம். யாத்திராகமம் 19:5, உபாகமம் 14,2-7, 6:8, உபாகமம் 32:8-9, 4:20, ஆமோஸ் 3:2, எசேக்கியேல் 20:5, சங்கீதம் 135:4, ஏசாயா 44:1-2 வரை உள்ள வசனங்களிலே அவ்விதமாக நாம் பார்க்கின்றோம். தங்களை தேவனுடைய விசேஷித்த ஜனம் என்று, இஸ்ரவேல் ஜனங்கள் கருதினார்கள். உபாகமம் 14:2 நீங்கள் உங்கள் தேவனாகிய கர்த்தருக்கு பரிசுத்த ஜனங்கள், பூமியின் மீதெங்குமுள்ள எல்லா ஜனங்களிலும் உங்களையே கர்த்தர் தமக்கு சொந்த ஜனங்களாய் இருக்க தெரிந்து கொண்டார் என்று அங்கே சொல்லப்படுகிறதை பார்க்கின்றோம்.

பூமியின் மீதெங்குமுள்ள எல்லா ஜனங்களிலும், தாங்கள் விசேஷித்தவர்கள் என்று சொல்லப்படுகிறதை நாம் இங்கு பார்க்கிறோம். சொந்த ஜனங்களாய் இருக்க தெரிந்து கொண்டார் என்றும், பரிசுத்த ஜனமாய் நீங்கள் இருக்கிறீர்கள் என்றும் இங்கே தேவன் சொன்னதாக மோசே கூறுகிறார். அவ்விதமாக தான் இஸ்ரவேல் ஜனங்கள் தங்களை கருதுகிறார்கள். இன்றுவரை, அது நல்லதுதான். விசுவாசத்தினாலே இஸ்ரவேல் சந்ததியாராகிய உங்களுக்கும், எனக்கும் இதே பாக்கியம்தான், பரிசுத்தமான ஜனமாக எல்லா ஜனங்களிலும் நம்மை சொந்த ஜனமாகத் தெரிந்து கொண்டார். ஆம் தேவன் இந்த இஸ்ரவேல் ஜனங்களை பரிசுத்தமான ஜனமாய் மாற்றுவதற்காக, சொந்த ஜனமாக மாற்றுவதற்காக, விசேஷித்த ஜனமாக மாற்றுவதற்காகத்தான் ஆபிரகாமை தேவன் கல்தேய தேசத்தில் இருந்து வெளியே கொண்டுவந்தார். பாபிலோன் வம்சத்தை சேர்ந்த அவனை பல இடங்களில் தேவன் வழிநடத்தி சென்றார். பலதேசங்களுக்கு

கொண்டு சென்று அவனுக்குள் இருக்கின்ற, இந்த பாபிலோனிய தன்மையை வெளியே எடுத்தார். அந்த சுபாவம் மாறும்படி வைத்தார் என்று நாம் சொல்லவேண்டும். அப்பொழுது அவனுடைய சொந்த தேசத்தை விட்டு, தகப்பனின் வீட்டை விட்டு அதாவது பாபிலோன் வம்சத்தை விட்டு வெளியே வரவைத்து புதிய ஒரு வம்சத்தை அவரே சிருஷ்டித்தார். அதாவது உருவாக்கினார். அவனுக்கு யூதஇனம் என்பதை உருவாக்கி கொடுத்தார். யூத இனத்தை சொந்தமாக்கி கொடுத்தார். இல்லாவிட்டால் அவனில் இருந்து யூத இனம், இஸ்ரவேல் தேசம் உருவானது. அப்பொழுது தேவன் அவனை பரிசுத்தப்படுத்தினார். விசுவாசமுள்ள சந்ததியாக அவர்களை வைத்து, ஆபிரகாமின் சந்ததியாக வைத்து பரிசுத்தமான ஜனமாக தேவன் மாற்றினார், தெரிந்து கொண்ட ஜனமாக மாற்றினார்.

பூமியில் உள்ள வம்சங்களெல்லாம் முக்கியமான, தெரிந்து கொண்ட ஜனமாய், பரிசுத்த ஜனமாய், விசேஷித்த ஜனமாய் மாற்றுவதற்காக ஆபிரகாமை தேவன் பல விதங்களில் உருவாக்கினார் என்று தான் நாம் பழைய ஏற்பாட்டில் பார்க்கின்றோம். பாபிலோன் அவன் மனதை விட்டு வெளியே செல்லும் அளவிற்கு அவன் பல இடங்களுக்கு பயணம் செய்ய வேண்டியதாக இருந்தது. ஆம் பிரியமானவர்களே, உங்களில், என்னில் இருக்கிற இந்த பாபிலோனிய தன்மை, பாவத்தின் தன்மை, முழுவதும் அகற்றப்பட்டு தேவனுடைய பரிசுத்த சுபாவம் என்று புதிய ஏற்பாட்டில் வாசிக்கின்றோம். உங்களில், என்னில் தேவனுடைய அந்த பரிசுத்தமான சுபாவம் உருவாக்குவதற்காகவே, பலதரப்பட்ட சோதனைகள் வழியாக ஒரு வேளை வேதனையான அனுபவங்கள் இருக்கலாம். ஆனால் அதன் மத்தியிலே ஆபிரகாமை உருவாக்கியதுபோல, உங்களையும், என்னிலும் பரிசுத்தமான ஜனமாய் அவர் மாற்றுகின்றார். சொந்த ஜனமாய் மாற்றுகின்றார். தெரிந்துகொண்ட ஜனமாய் மாற்றுகின்றார். ஆகவே நம்முடைய சுபாவம் மாறும்படியாகத்தான் பலதரப்பட்ட பாடுகள் வழியாய் செல்லும்போது, நாம் அதை தாண்டிவரும்போது தேவ வார்த்தை அடிப்படையிலே சகித்துக்கொள்ளும்போது, ஆவியின் கனி நம்மேல் உருவாகிறது. அந்த ஆவியின் கனி வரும்போதுதான், தேவனுடைய கனிவான சுபாவங்கள் நம்மிலிருந்து வெளியேவரும். இல்லாவிட்டால் நம்முடைய மாம்சீக சுபாவம்தான் வெளியே வரும். இன்றைய நாட்களில் அநேகர் இரட்சிக்கப்பட்டு இருக்கிறேன் என்று சொல்லுகிறார்கள். ஆனால் தெய்வீக சுபாவம்

அவர்களில் இருந்து வெளியே வரவில்லை. ஏதாவது ஒரு பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டுவிட்டால் போதும், இவர்கள் தேவனுடைய பிள்ளையா? என்று மற்றவர்கள் கேட்கிற அளவுக்கு சத்தம் போடுறாங்க, சண்டையிடுகிறார்கள், மூர்க்கதனமாய் பேசுகிறார்கள். பிரியமானவர்களே, ஆபிரகாம் வாழ்க்கையிலே அந்த பாபிலோனிய தன்மை முற்றிலுமாக அகற்றியபிறகு யூதன் என்று அவனை மாற்றினார். யூதஜனம் அவரிலிருந்து தோன்றியது.

பாபிலோனிய கலாச்சாரம் சென்று யூத இனம், யூத கலாச்சாரம் என்று புதிய கலாச்சாரத்தை ஆபிரகாமுக்கு கர்த்தர் கொடுத்தார். ஆச்சரியமான, அதிசயமான மிகமிக ஆசீர்வதிக்கப்பட்ட தேசத்தை கொடுத்தார். அவனுடைய இனத்தைவிட்டு தேவன் வெளியே வரச்சொன்னார். பாபிலோனிய இனத்தை விட்டு வெளியே ஆபிரகாம் வந்தான். புதிய இனத்தைக் கொடுத்தார், யூத இனம், என்ன ஆச்சரியமான தேவன் பாருங்கள். அவர் இவ்வளவு பரிசுத்தமான ஜனமாய் விசேஷித்த ஜனமாய் மாற்றவே உங்களையும், என்னையும் அழைக்கின்றார். நீங்கள் தேவனுக்கு ஒத்துப் போவீர்கள் என்றால் இந்த பூமியில் உள்ள சகல ஜாதிகளிலும் உங்களை புகழ்ச்சியிலும், கீர்த்தியிலும் நிலைத்து நிற்கச்செய்வார் என்பதில் சந்தேகம் இல்லை.

இரண்டாவதாக, இஸ்ரவேல் ஜனங்களை தேவன் தேர்ந்தெடுத்த இந்த காரியம் உலகிற்கு மிகவும் ஆசீர்வாதமாய் இருந்தது என்பதை நீங்களும், நானும் அறிவோம், அவர்களை ஒரு நோக்கத்தோடு தெரிந்தெடுத்தார். ஒரு குறிக்கோளோடு தேர்ந்தெடுத்தார். அந்த தேர்ந்தெடுப்பை நாம் புரிந்துகொள்ளும்போது அவர்கள் எவ்வளவு தூரம் உலகிற்கு ஆசீர்வாதமாய் இருக்க போகின்றார்கள் என்பதை புரிந்துகொள்ள முடிகிறது. இதை நாம் ஏசாயா 43:20ன் பின்பகுதி, சங்கீதம் 79:13, 96:1-10 ஆகிய வசனங்களில் பார்க்கின்றோம், மட்டுமல்ல இந்த இஸ்ரவேல் ஜனங்கள் தேவன் தங்களுக்கு செய்த காரியங்களுக்கு, உலகிற்கு அடையாளமாய் இருக்கிறார்கள். இதற்கு சாட்சிகளாய் இருக்கிறார்கள் என்றும் நாம் பார்க்கின்றோம். ஏசாயா 43:10-12, 44:8 வசனம் போன்ற இடங்களில் இந்த காரியங்களை பார்க்கின்றோம். அப்பொழுது அவர்கள் தேவனுக்கு சாட்சியாய் இருந்தார்கள். தங்களுக்கு தேவன் செய்த அற்புதமான காரியங்களுக்கு அவர்கள் சாட்சிகளாய் இருந்தார்கள். இதை நாம் புரிந்துகொள்ள வேண்டியது அவசியம்.

இஸ்ரவேல் ஜனங்கள் தங்களை விசேஷித்த ஜனம் என்று கருதினார்கள். அதேபோல இஸ்ரவேல் ஜனங்கள் தேர்ந்தெடுப்பும் விசேஷித்த விதமாக இருக்க காரணம், அவர்கள் பூமிக்கு ஆசீர்வாதமாய் இருக்க போகிறார்கள். தேவனுடைய மகத்துவத்தை எடுத்து விளம்பப் போகிறார்கள். இந்த காரியத்தை இஸ்ரவேல் வரலாற்றில் நாம் பார்க்கின்றோம்.

## <u>கோத்திரப்பிதாக்களின் வாழ்க்கை முறை</u>

இப்பொழுது கோத்திர பிதாக்களுடைய வாழ்க்கை முறையைப்பற்றி சற்று சிந்திக்க இருக்கிறோம். கோத்திர பிதாக்களுடைய வாழ்க்கை முறை, இதற்கு ஆதாரமாக ஆதியாகமம் 12:4-10, 13:1, 20:1, 26:1, 17, 23 போன்ற இடங்களிலே, கோத்திர பிதாக்களின் வாழ்க்கையை குறித்து அதிகமாய் அறிந்து கொள்கிறோம். இந்த கோத்திர பிதாக்களுடைய வரலாறு ஏறத்தாழ கி.மு. 1800ல் ஆரம்பம் ஆகிறது. இந்த கோத்திர பிதாக்கள், நாடோடிகளாய் இருந்திருக்கிறார்கள். குறிப்பாக ஆடுமாடுகள் மேய்க்கிறவர்களாக இருந்திருக்கிறார்கள். குறிப்பாக அவர்கள் கூடாரங்களில் குடியிருந்து இங்கும், அங்குமாய் அலைகிற ஜனமாய் இருந்திருக்கிறார்கள். இவர்கள் பாலஸ்தீனத்தை சுற்றி மேலும், கீழுமாக இவர்களுடைய பயணங்கள். அதாவது மேய்ச்சல் இடங்களைத்தேடி, தங்களுடைய ஆடுமாடுகளுக்கு தேவையான தண்ணீர் போன்றவற்றை தேடி இவர்களுடைய பயணம் மேலும், கீழுமாக அவர்களுடைய எல்லைகளிலே இருந்திருக்கிறது. அதுபோல முழுதுமாக எப்பொழுதும், இவர்கள் அங்கும், இங்கும் அலைந்துகொண்டு இருந்தார்கள் என்று சொல்லுவதற்கில்லை. எங்கே போதுமான தண்ணீர் கிடைத்ததோ, மேய்ச்சல் நிலம் இருந்ததோ, அங்கே அவர்கள் கூடாரம் இட்டு தங்கிவிட்டார்கள். குறிப்பாக அவர்கள் பட்டணங்களிலே தங்கவில்லை என்று அவர்கள் வரலாற்றிலே, குறிப்பாக வேதத்திலே நாம் பார்க்கின்றோம். அவர்கள் குறிப்பிட்ட இடங்களிலே பயிர் செய்தார்கள் என்றும் நாம் அறிகின்றோம். ஆதியாகமம் 26:12 ஈசாக்கு அந்த தேசத்தில் விதை விதைத்தான், அதை கர்த்தர் அவனை ஆசீர்வதித்ததினால் அந்த வருஷத்தில் நூறுமடங்கு பலன் அடைந்தான் என்று நாம் அங்கே பார்க்கின்றோம். குறிப்பிட்ட இடங்களிலே அவர்கள் விவசாயம் செய்து இருக்கிறார்கள். தேவன் அவர்களை ஆசீர்வதித்து பெருகபண்ணி இருக்கின்றார். அவர்களுக்கு சொந்த இடம் என்று ஒன்றும் இல்லை. மரித்தவர்களை அடக்கம் செய்வதற்காக மட்டுமே நிலத்தை வாங்கி

இருக்கின்றார்கள். ஆதியாகமம் 23, 33:9, 50:5 போன்ற வசனங்களில் இவற்றை பார்க்கின்றோம். மரித்தவர்களை அடக்கம் பண்ணுவதற்கு மட்டும் நிலத்தை வாங்கி இருக்கிறார்கள். மற்றபடி சொந்தநிலம் என்று எதுவும் இல்லை. அதே விதத்தில் அவர்களுக்கு அதிகமான செல்வம் இருந்து இருக்கிறது. அவர்களுக்கு அநேக அடிமைகளும் (வேலைக்காரர்கள் மற்றும் வேலைக்காரிகள்) இருந்து இருக்கிறார்கள் என்று ஆதியாகமம் 13:2, 18:7, 14:14 போன்ற இடங்களில் பார்க்கலாம். ஏற்கனவே கூறியதுபோல கோத்திர பிதாக்களுடைய நாடோடி வாழ்க்கை அந்த கிராமமக்களின் அந்த பயிர் இடுகிற மக்களுடைய தொடர்போடு இருந்தது என்று.

**<u>கோத்திர பிதாக்களின் சமய நம்பிக்கை:-</u>**

நாம் வேதத்திலிருந்து பார்க்கும் போது ஆபிராகாமுடைய மூதாதையர்கள் பல தெய்வ வழிபாடு கொண்டவர்களாக இருந்திருக்கிறார்கள். அதைக்குறித்து நம்முடைய வேதத்தில் யோசுவா24:2,14 ஆதி31:34-35, 53-ம் வசனம் ஆதி35:2 ஆகிய இடங்களில் பல தெய்வ வழிபாடுகள் கொண்டவர்கள் என்பதை நாம் பார்க்கின்றோம். ஆபிரகாமின் இளமைப் பருவத்தைக் குறித்து நாம் அதிகம் பார்க்கமுடிவதில்லை. தேவன் ஆபிரகாமை அழைத்ததை ஆதி 12:1-3ல் பார்க்கிறோம். அதில் தேவன் அவனுடைய இனத்தை விட்டு குறிப்பாக பல தெய்வ வழிபாடு உள்ள இடத்திலிருந்து வெளியே கொண்டு வந்து ஒரே தெய்வ வழிபாட்டிற்கு நேராக, பக்தியுள்ள, ஒரே சிந்தையுள்ள, வைராக்கியமுள்ள, விசுவாமுள்ள ஒரு மனிதனாக மாற்ற தேவன் அவனை அழைக்கின்றார்.

ஒவ்வொரு கோத்திர பிதாக்களையும் நாம் பார்க்கும் போது அவர்களுக்கு தேவன் தரிசனமானதை, அவர்களை தெரிந்து கொண்டதை, அவர்களோடு தேவன் இருப்பதைக் குறித்து வாக்குப் பண்ணினதை அவர்கள் முற்றிலுமாய் நம்பி தொழுது கொண்டார்கள் என்று பார்க்கிறோம். அப்படிபட்ட தேவனை அவர்கள் தங்கள் சொந்த தெய்வமாக ஏற்றுக்கொண்டார்கள். அவர்தான் நாம் விசுவாசிக்கும் யெகோவாவாகிய நம்முடைய தேவன். ஆனால் அவர்களுக்கு அப்படியெல்லாம் தெரியாது. தங்களுக்கு முன்பாக தோன்றி தரிசனம் கொடுத்தவரை தேர்ந்தெடுத்து வாக்குக் கொடுத்து தன்னோடு இருப்பவராக தோன்றின தேவனை தங்களுடைய சொந்த தெய்வமாக ஏற்றுக் கொண்டார்கள். (ஆதி12:13, ஆதி15:1-6,17 ஆதி28:15-20). இவ்விதமாக தேவன், தரிசனமாகும் போது அவரை தன்னுடைய குடும்பத்தில்

ஏற்றுக் கொண்டார்கள். அவருக்கு விசேஷித்த பெயர்களும் கொடுத்து அழைத்து வந்தார்கள். அவர்தான் தங்களுடைய பிதாக்களின் தேவன் என்று சொல்லி அடையாளப்படுத்தி கொண்டார்கள். ஆபிரகாமின் தேவன், ஈசாக்கின் தேவன், யாக்கோபின் தேவன் என்று அழைக்கப்பட்டார். இவ்விதமாக கோத்திர பிதாக்கள் தேவனை அழைத்தார்கள். ஆதியாகமம் 31:53ல் "ஆபிரகாமின் தேவனும் நாகோரின் தேவனும் அவர்கள் பிதாக்களின் தேவனுமாயிருக்கிறவர் நமக்குள்ளே நடுநின்று நியாந்தீர்ப்பாராக என்றான். அப்பொழுது யாக்கோபு தன் தகப்பனாகிய ஈசாக்கின் பயபக்திக்குரியவர் மேல் ஆணையிட்டான்" என்று வாசிக்கிறோம். இதில் நாகோரின் தேவன் என்று சொல்வதைப் பார்க்கிறோம். இதில் முக்கியமாக **"பயபக்திக்குரியவர்"** என்று சொல்லப்படுவதை நாம் பார்க்கின்றோம். இவ்விதமாக தேவன் குடும்பத்திலுள்ள ஒவ்வொருவருக்கும் காணப்படாதவராக இருந்தார். ஆனால் அந்த குடும்பங்களுக்கு அவர் மறைமுகத்தலைவராய் இருந்தார். இப்படியாக கோத்திரங்களுடைய குடும்ப அமைப்பு, சமயம் அமைந்திருந்தது.

இந்த கோத்திர பிதாக்களுடைய காலக் கட்டத்தில் கானானியருடைய தெய்வம் குறிப்பிட்ட இடத்தோடு தொடர்புபடுத்திப் பேசப்பட்டது. ஆனால் தேவனுடைய நாமத்தைக்குறித்து நாம் பார்க்கும்போது குறிப்பாக கோத்திரப்பிதாக்களின் காலத்திலே அவர்கள் தனிப்பட்ட தேவனாக (Personal God) இருந்ததை நாம் பார்க்கிறோம். குறிப்பிட்ட மனிதர்களோடு தேவன் தம்மை தொடர்பு படுத்திக்கொண்டார். ஆதியாகமம் 26:24-ல் இதை புரிந்து கொள்வோம். இங்கு அழகாக சொல்கிறார். உன்னுடைய தகப்பனாகிய ஆபிரகாமுடைய தேவன் "நான் உன்னோடே கூட இருந்து என்று சொல்கிறார். தனிப்பட்ட தேவனாக இருக்கிறார், (Personal God) அறியப்படுகிறார். குறிப்பாக கோத்திர பிதாக்களின் காலத்திலே. ஆம்! அவர் எனக்கும், உங்களுக்கும் இவ்விதமாக தனிப்பட்ட தேவனாக இருக்கிறார். நான் உன்னோடே கூட இருந்து, நான் உன்னுடைய தகப்பனுடைய தேவன் என்று நம்மோடு உறவு கொள்கிறவராயிருக்கிறார். ஆதி 31:42,53 ஆதி 32:9 ஆதி 49:25 யாத்3:6 போன்ற வசனங்களிலும் நாம் இவ்விதமாய் பார்க்கின்றோம்.

முன்பு அந்த காலக் கட்டத்தில் இருந்து கானானிய சந்ததியாருடைய இடத்தோடு தொடர்பு படுத்திப் பார்க்கின்றோம். ஆனால் இங்கு மனிதர்களோடு தனிப்பட்ட உறவுகொண்ட தேவனை நாம் பார்க்கின்றோம். இந்த

கோத்திரப்பிதாக்கள் ஒரே தெய்வ வழிபாடு உடையவர்களாய் இருந்தார்கள். தங்களுடைய தெய்வம் மட்டுமே ஒரே தெய்வமாய் இருக்கிறார் என்ற கருத்துடையவர்களாய் இருந்தார்கள். ஈசாக்கு தன்னுடைய, தகப்பனுடைய தேவனை வழிபட்டதாக பார்க்கிறோம். அதே போல் ஆதி 35:2 பார்க்கிறது போல யாக்கோபுடைய குடும்பத்தார் தாங்கள் கொண்டு வந்திருந்த அந்நிய தெய்வங்களை விலக்கிப் போட்டதாக நாம் பார்க்கின்றோம். அதை தூர தள்ளினார்கள். ஏனெனில் ஆவியான நம் தேவனுக்கு ரூபமில்லை, சொருபமொன்றுமில்லை மட்டுமல்ல அவர் ஒருவரே தெய்வம் என்று நம்பினார்கள்.

இந்த கோத்திர பிதாக்களின் சமயத்தை நாம் ஆராயும்போது அன்றைய காலகட்டத்திலிருந்த பல தெய்வ வழிபாடு, குறிப்பாக, மெசப்பத்தோமியா போன்ற இடங்களில் காணப்பட்டது போல பல தெய்வ வழிபாடு உண்டாயிருந்தது. ஆனால் அப்படிப்பட்ட தெய்வ வழிபாடு இவர்களிடத்தில் இல்லை. கானான் தேசத்தில் காணப்பட்ட தெய்வ வழிப்பாட்டைப்போல் அதாவது **"செழுமைக்கு"** என்று ஒவ்வொன்றிற்கும் வைத்திருந்த தெய்வ வழிபாடும் இந்த கோத்திர பிதாக்களின் காலத்தில் இல்லை. ஆனால் கோத்திர பிதாக்கள் தங்களுடைய தேவனை பலதரப்பட்ட பெயர்கொண்டு அழைத்தார்கள் என்று சொல்ல வேண்டும். யாத் 6:3 ஆதி 17:1 ஆதி 43:14 **"எல்ஷடாய்"** என்று அழைக்கிறார்கள். சர்வ வல்லமையுள்ள தேவன் (All Mighty) ஆதி 17:1 சொல்லுகிறார். இன்னும் எல்எலியோன் உன்னதமான தேவன் என்று அறியபட்டார். ஆதி 14:18-24 வரை வசனங்கள், ஆதி 16:13 **"ஏல்ஓலாம்"** என்று தேவனை அழைத்தார்கள். ஆதி 16:13 **"எல்ரோயி"** காண்கிற தேவன் என்று அர்த்தம்பட அழைத்தார்கள். ஆதி 31:13 **"எல்பெத்தேல்"** ஆதி 35:7-ல் பார்க்கின்றோம். ஏல் என்ற பெயரின் அடிப்படையில் தேவனை அழைத்தார்கள். கானானிய தெய்வங்களுக்கு தலைவனாக அல்லது முக்கியமான இடத்தில் உள்ள தெய்வத்திற்கு ஏல் என்ற வார்த்தை பயன்படுத்தியதை நம்முடைய வரலாற்றில் பார்க்கிறோம்.

அப்படியென்றால் ஏல் என்றால் தெய்வம். அது semitic வார்த்தையாயிருக்கிறது. இந்த வார்த்தைக்கு தேவன் என்று அர்த்தம். அதே போல் இந்த வார்த்தை கானானிய தெய்வத்தைக் குறித்ததாய் இருக்கவில்லை. ஆகையால் தான் நம்முடைய தேவனை இவ்வாறாக அழைக்கிறதை நாம்

பார்க்கிறோம். (எல் எலியோன், எல்ஷடாய், எல்ரோயி, எல்ஒலாம்). யாத் 6:2 நான் யெகோவா என்று மோசேக்கு வெளிப்படுத்துகிறார். கோத்திரபிதாக்களுக்கு அவர் (தேவன்) தம்முடைய பெயரை அவர் வெளிப்படுத்தவில்லை என்று பார்க்கிறோம். இந்த கோத்திர பிதாக்கள் தேவனை யெகோவா என்று அறிந்திருக்கவில்லை. ஆனால் யெகோவா தேவன்தான் இவர்களுக்கு தரிசனமாகியிருக்கின்றார். ஆனால் இவர் தான் தரிசனமானார் என்று அறிந்திருக்கவில்லை. ஆதி 12:1 நாம் பார்க்கிறது போல அந்த தேவன்தான் இவர்களை அழைத்து இவர்களுக்கு வாக்குப்பண்ணி அழைத்திருக்கிறார். ஆதி 4:26-ன்படி அவர்கள் யெகோவா தேவனை வணங்கினார்கள் என்பதை வசனங்களின் மூலம் அறிகிறோம்.

இந்த கோத்திர பிதாக்களுடைய சமய வழிபாடு வித்தியாசமாகத்தான் இருந்திருக்கிறது. அது மிகவும் எளிமையான வழிபாடு. ஆனால் இவர்கள் ஒரு பொழுதும் மனிதர்களை பலியிடுகிறவர்களாக இருந்திருக்கவில்லை. ஆனால் அந்த கால கட்டத்திலே அவர்களுக்கு அருகில் வாழ்ந்த மற்ற இனத்தவர்கள் மனிதர்களை பலியிடும் பழக்கமுடையவர்களாக இருந்தார்கள் என்பதை வரலாறுகளில் நாம் பார்க்கின்றோம். ஆனால் புறஜாதியார்களுடைய சமயத்தைப் போன்று சில ஒற்றுமைகள் காணப்பட்டு இருக்கிறது, இந்த கோத்திர பிதாக்களின் சமய வரலாற்றிலே, இவர்கள் (கோத்திர பிதாக்கள்) ஜெபித்தார்கள். மட்டுமல்ல, அந்த கிழக்கத்திய பழக்க வழக்கத்தைப் போலவே இந்த ஜெப அமைப்பு இருந்தது. அதே போல தேவனை தொழுதுகொள்ளுவதற்கு அவர்கள் ஜெபிக்கும் முறை, வணங்கிய முறை மற்றும் பலிபீடத்தைக் கட்டி மிருகங்களை பலியிடும் முறை ஆகியவைகள் இந்த கிழக்கத்திய கலாச்சாரத்தைப் போன்றே காணப்பட்டது என்று நம்மால் அறியமுடிகிறது. ஆதி 25:21 ஆதி 17:3 ஆதி 24:52 போன்ற இடங்களில் பார்க்கிறோம். இவைகளெல்லாம் semitic இனத்தின் அடிப்படையிலே இந்த காரியங்களெல்லாம் காணப்பட்டது என்பதைப் பார்க்கிறோம். ஆனால் இவர்களுக்கு அந்த குறிப்பிட்ட இனத்தைப் போன்று ஒரு விசேஷித்த இடமோ, போதகரோ (prisits) மற்றும் அந்த மத வழிபாட்டை நடத்தி செல்ல யாரும் இல்லை. இதுபோல இவர்கள் பலவிதங்களில் தங்களுக்கு அருகிலுள்ள கலாச்சராத்திலிருந்து இவர்களுடைய கலாச்சாரம், சமயநம்பிக்கை வேறுபட்டிருந்தது. இவ்விதமாக இவர்கள் கோத்திர பிதாக்கள் தேவனோடு தனிப்பட்ட உறவை ஏற்படுத்திக் கொண்டவர்களாக இருந்தார்கள். ஆனால் மற்ற

சமயங்களில் அப்படியில்லை. அவர்கள் குறிப்பிட்ட இடத்தின் அடிப்படையில் இடத்தோடு சம்பந்தப்படுத்தி தேவனைப் பாத்தார்கள். ஆனால் தேவனோ மனிதர்களோடு அல்லது மனிதன் தேவனோடு தனிப்பட்ட உறவு கொண்டு அதை முக்கியப்படுத்தி பார்த்தார்கள் என்று நாம் பார்க்கிறோம். இவ்விதமாக புறஜாதியாருடைய மதத்தைவிட இவர்களுடைய சமயநம்பிக்கை வேறுபட்டிருந்தது. நம்முடைய கோத்திர பிதாக்கள் மிகவும் ஆச்சரியமானவர்கள்தான்.

பிரியமானவர்களே! இவ்விதமாகத்தான் நம்முடைய கலாச்சாரம், சமயநம்பிக்கை ஆகியவை நம்முடைய சமயநம்பிக்கையை பாதிக்கிறதை நாம் பார்க்கின்றோம். இந்த கிறிஸ்தவ வரலாற்றில் அல்லது கிறிஸ்தவ சமயத்தில் பார்க்கும் போது புறஜாதியாருடைய பழக்கவழக்கங்கள் உள்ளே புதைந்து கிடக்கிறது. ஆனால் நம்முடைய கோத்திரப்பிதாக்களைப் போல ஒரு விசேஷித்த தனிப்பட்ட உறவுடைய தேவனாக நம்முடைய தேவன் இருக்கிறார். அவர் மற்ற சமயத்தைப் போல தேவ வழிபாடு என்பது தேவனை அறிவது என்று (Christian worship) Paper–ல் அதாவது நமது வேதாகமக் கல்லூாயீல் படிக்கும்போது படிக்கிறோம். தேவனை அறிவது தான் தொழுகை மற்ற சமயத்தார் கைகளை எடுத்துக் கொண்டு வணங்கி போவது போல அல்ல, நம்முடைய உறவு. நான் உன்னுடைய தேவன் என்று சொல்லுகிற தேவன் உங்களுடைய என்னுடைய தேவன் இவ்விதமாக தனிப்பட்ட உறவு அதாவது நம்முடைய தேவன் என்று அழைக்கப்படுகிற இடத்திற்குத்தான் (உறவைத்தான்) வலியுறுத்துகிறார். ஒருவேளை நம்முடைய கலாச்சாரத்தில் நம்முடைய சமுதாயத்தில் சமய வரலாற்றில் இப்படி புறஜாதியாருடைய பழக்கவழக்கங்கள், மூடப்பழக்க வழக்கங்கள் சில சடங்காச்சாரங்கள் உள்ளே இருக்குமாயின் அதை தூர எடுத்துப் போட வேண்டியது அவசியம். அவர்கள் அப்படித்தான் செய்கிறார்கள், அவர்கள் அப்படித்தான் தெய்வத்தை தொழுது கொள்ளுகிறார்கள் ஆகையால் நான் அப்படித்தான் தொழுதுகொள்ளுவேன் என்று சொல்லக்கூடாது. வேதம் எப்படி எதிர்பார்க்கிறதோ அப்படித்தான் நாம் தேவனை தொழுது கொள்ள வேண்டும் என்று கர்த்தர் எதிர்ப்பார்க்கிறார்.

நாம் அநேக காரியத்தை நம்முடைய கோத்திர பிதாக்களுடைய வாழ்விலிருந்து கற்றுக்கொண்டோம். அவர்களுடைய நம்பிக்கை, தேவன்

அவர்களை அழைத்த விதம் எல்லாவற்றையும் பார்த்தோம். இன்னும் அநேக காரியங்களை கற்றுக்கொள்ளப் போகிறோம்.

இந்த வரலாற்றை படிப்பதினாலே உங்கள் வாழ்வில் என்ன பயன் உண்டாகிறது என்பதை கவனித்து பாருங்கள். ஆபிரகாமுடைய வாழ்க்கையின் ஒருசில காரியங்களைத்தான் இந்த நாளிலே சிந்தித்தோம். தேவன் அவனை வெளியே கொண்டு வர அழைத்தார். அந்த அழைப்புக்கு அவர் கீழ்ப்படிந்தார். கீழ்ப்படிந்து வெளியே வந்ததினால் தேவன் அவனை விசேஷித்த விதமாய் ஆசிர்வதித்தார் என்று பார்க்கிறோம். இனத்தை விட்டு வெளியே வரச்சொன்னார். அவனுக்கென்று சிறந்த இனமான யூத இனத்தைக் கொடுத்தார். தேசத்தை விட்டு வெளியே வரச்சொன்னார். உலகிலேயே சிறந்த தேசமான இஸ்ரவேல் தேசத்தைக் கொடுத்தார். தகப்பன் வீட்டில் வேறு கலாச்சாரம். ஆனால் அவனிமித்தம் உண்டான கலாச்சாரமோ பரிசுத்தமான கலாச்சாரம், இந்த பரிசுத்தமான கலாச்சாரம், பரிசுத்தமான ஜனங்கள் என்று சொல்லப்பட்ட வசனத்தை நான் முன்னே வாசித்தேன். அவ்விதமான பரிசுத்தமான பழக்க வழக்கங்கள் ஆபிரகாமின் வாழ்க்கையிலே தேவன் கொடுத்தார். அவன் மூலமாக சபைக்கு கொடுத்திருக்கிறார். அதை விசேஷமாக நாம் பார்க்கும் போது பரலோகத்தின் அந்த பழக்கவழக்கங்கள் தான் யூத கலாச்சாரத்திலே அதிகமாய்க் காணப்படுகின்ற யூதநாடு வருகின்ற புகழ்ச்சியில் காணப்படும். பரலோகத்தில் இவ்விதமாய் பின்பற்றப்படும் என்பதை யூத கலாச்சாரத்தின் தேவன் அமைத்தார் என்று தான் சொல்ல வேண்டும். அந்த கலாச்சாரம் யூத ஜனங்களுக்கு மாத்திரம் உரியது அல்ல. கர்த்தரை நம்பி வேதத்தின் அடிப்படையில் உருவாகிற அந்த சுபாவம், அந்த பழக்கவழக்கம் நம்முடைய கலாச்சாரமாயிருக்கிறது. பழங்கால இஸ்ரவேல் தேசத்தில் இவ்விதமான ஒரு கலாச்சாரம் உண்டாயிருந்தது. ஆனால் வேதத்தின் கலாச்சாரம் மிகவும் குறைந்திருக்கிறது. ஆக தேவன் கொடுத்த கலாச்சாரத்தைப் பாருங்கள் பரலோகத்தின் கலாச்சாரம் உங்கள் வாழ்விலும், என் வாழ்விலும் இதே காரியத்தை தான் கர்த்தர் செய்கிறார். உலகத்தை உங்கள் உள்ளத்திலிருந்து வெளியே எடுக்க வேண்டும். அதற்காகத்தான் பல இடங்களுக்கு கொண்டு செல்கிறோம். பல காரியங்கள் வழியாக, அனுபவங்கள் வாயிலாக நம்மை நடத்தி உங்களுக்குள்ளாகவும், எனக்குள்ளாகவும் இருக்கிற உலகத்தை வெளியே எடுத்து தேவனுடைய சுபாவத்தை தேவன் எதிர்பார்க்கின்ற தன்மையை உள்ளே

வைக்கிறார். நீங்களும், நானும் அவருக்காய் வாழ அழைக்கப்பட்டிருக்கின்றோம். உங்களைக் கொண்டு தேவன் வரலாற்றை உருவாக்க விரும்புகிறார். இஸ்ரவேல் என்ற வரலாறு இன்று வரை தனிசிறப்பு வாய்ந்ததாய் இருக்கிறது. நீங்கள் தேவனுக்காய் வாழும் போது நீங்களும் உங்கள் ஊரிலே, உங்கள் ஜனங்கள் மத்தியிலே விசேஷித்த ஜனமாயிருப்பீர்கள். வரலாற்றை உருவாக்கினவர் களாயிருப்பீர்கள். இஸ்ரவேல் வரலாற்றை படிக்கின்ற உங்களுக்கு அதுதான் தெளிவாகிறது. அது உண்மையானது என்பதை பார்க்கிறோம். இஸ்ரவேல் வரலாறு எவ்வளவு உண்மையோ அதேபோல் வேதமும் உண்மை. அந்த வேதத்தில் சொல்லப்படுகிற தேவனும் உண்மையாயிருக்கிறார். நிச்சயமாயிருக்கிறார். நிச்சயமாகவேயிருக்கிறார். அவரை நம்பி உங்களுடைய வாழ்க்கையை ஒப்புக்கொடுக்க முடியும். ஆபிரகாம் நம்பி வந்தான் தேவன் தாம் சொன்னபடியே ஆசிர்வதித்தார். ஒருபொழுதும் மாறாதவர் என்பதைத்தான் இந்த வரலாறு காண்பிக்கிறதென்று ஏற்கனவே சிந்தித்திருக்கிறோம். தேவன் மாறாதவர் என்பதை இந்த வரலாறு சுட்டிக் காட்டுகிறது. நீங்களும், நானும் மாறாத தேவனை தொழுது கொண்டிருக்கிறோம். மாறாத தேவன் உங்கள் வாழ்விலும் மாறாதபடி ஆசிர்வதிப்பார். ஆசிர்வாதங்களை பெற்றுக் கொள்ளுங்கள். ஆமென்!!!

## <u>கேள்விகள்:</u>

1. தேவன் எவ்வாறு வரலாற்றோடு தொடர்புடையவராய் செயல்படுகிறார் என்பதனைப் பற்றி இப்பாடத்தில் கற்றுக்கொண்டவைகளைக் கூறுக?
2. ஆதியாகமம் 1-11 அதிகாரங்களின் நிகழ்வுகள் எவைகளைப் பற்றியது என்பதனையும், ஆதியாகமம் 12ம் அதிகாரத்திலிருந்து தேவனின் செயல்பாடு எவ்விதமாய் காணப்படுகிறது என்பதனையும் கூறுக.
3. இஸ்ரவேல் தேசமும் அதனுடைய வரலாறும் ஆபிரகாமிலிருந்து எவ்விதமாய் ஆரம்பமானது என்பதனையும் அது எவ்வாறு வளர்ந்து வந்தது என்பதனையும் ஆபிரகாமின் அழைப்பு மற்றும் அவருக்கான வாக்குத்தத்தங்களிலிருந்து விளக்கமாக கூறுக?
4. தேவன் இஸ்ரவேலர்களை தேர்ந்தெடுத்த இரண்டு விதங்களைப் பற்றியும், தேர்ந்தெடுத்து நோக்கங்களைப் பற்றியும் கூறுக?
5. வேதாகம முற்பிதாக்களின் வாழ்க்கை முறை எவ்விதமாக இருந்தது என்பதனைக் கூறுக?

6. கோத்திர பிதாக்களின் சமய நம்பிக்கையைப் பற்றி இப்பாடத்தில் கற்றுக்கொண்டவைகளை விளக்கமாக கூறுக?